**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 77/2009</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்** 18 – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | **18.02.2026** |
| **பெயர்** | **பத்மநாபன்** |
| **த/பெ** | **சங்கர்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 12.01.p.m**

**<u>1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில்</u>**
**<u>குறுக்கு விசாரணை–</u>**

1. இந்த வழக்கை நான் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் விளம்புகை மற்றும் நிரந்திர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் பெற்றேனா என்றால் என் தாத்தா கிரையம் பெற்றார். எந்த வருடம் என் தாத்தா கிரையம் வாங்கினார் என்றால் 1935. அந்த கிரையப்பத்திரத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ 1 ஆவணத்தில் சான்றிட்ட நகலை தான் நான் தாக்கல் செய்துள்ளேன் அதன் அசல் ஆவணம் என்னிடம் இல்லையா என்றால் இல்லை. எப்போது தொலைந்தது என்றால் எனக்கு தெரியாது.

2. அந்த வா.சா.ஆ 1 கிரையப்பத்திரத்தில் சர்வே எண் 71/1 பி என்று தான்

குறிப்பிட்டுள்ளது என்றால் சாட்சி இந்த கேள்விக்கு எந்த பதிலும் அளிக்கவில்லை. சர்வே எண் 71/1டி வா.சா.ஆ 1 ஆவணத்தில் இல்லை என்றால் சரியல்ல. பத்திரத்தில் சர்வே எண் 96/3 என்று தான் குறிப்பிட்டுள்ளது. வழக்கு சொத்தின் விவரத்தில் சர்வே எண் 71/1டி என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தின் 4 எல்லைகள் தெரியுமா என்றால் தெரியாது. என் தாத்தாவான ஆண்டியப்பரெட்டிக்கு எத்தனை பிள்ளகைள் என்றால் என் தந்தை சங்கரன் என்று ஒரே பிள்ளை தான். என் தாத்தாவிற்கு பெண் பிள்ளைகள் இல்லை என்றால் சரிதான். பாட்டி உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை.

3. என் தாத்தா எப்போது இறந்தார் என்பதை காண்பிக்க வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் எனக்கு வயது 35. என்னுடன் பிறந்தவர்கள் 2 மூத்தவர்கள். அவர்கள் செல்வம் அவருக்கு வாரிசுகள் உண்டு. மற்றொருவர் கௌசல்யா அவர் உயிரடன் தான் இருக்கிறார். செல்வம் தான் 17.01.1998-ல் இறந்துவிட்டார். மேற்சொன்னவர்களை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எங்களுக்குள் கூர்சிட்டு எழுதிக்கொண்டோம், எப்போது கூர்சிட்டு எழுதிக்கொண்டோம் என்றால் 12.12.2007-ல் கூர்சிட்டு எழுதினோம்.

4. மேற்சொன் கூர்சிட்டிற்கு முத்திரை தீர்வை செலுத்தாத காரணத்தினால் நீதிமன்றம் அதனை குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். கூர்சிட்டு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.அந்த கூர்சிட்டை பார்த்தால் தான் யாருக்கு எந்த பாகம் என்ற வவிரம் தெரியும் என்றால் சரிதான். இவ்வழக்கில் நான் சொத்துரிமை கேட்பதனால் பிற வாரிசுகளை இவ்வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்

என்றும் அவ்வாறு சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 4 மற்றும் 5 ம் பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ15 கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். 06.07.2011–ல் வா.சா.ஆ 15 ஆவணம் கிரையம் செய்யப்பட்து என்றால் சரிதான்.

5. மேற்சொன்ன வா.சா.ஆ 15 ஆவணத்திலும் சர்வே எண் 71/1 டி என்று தான் குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அதில் மேற்கு, வடக்கு மற்றும் தெற்கு பக்கத்தில் முரளிகிருஷ்ணா இடம் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 03.08.2010–ல் நிரந்திர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கிய பிறகு இயற்றப்பட்ட ஆவணம் இது. வழக்கு சொத்தை நான் அனுபவிப்பதற்காக என் பெயரில் பட்டா உள்ளதா என்றால் பட்டா எதுவும் இல்லை. சண்முக ரெட்டியின் மகனான ஆண்டியப்பரெட்டிக்கு பல வருடங்களுக்கு முன்பாகவே பட்டா வழங்கப்பட்டு அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் யு.டி.ஆரின் கீழ் தவறுதலாக அவர்கள் பெயரில் வழங்கப்பட்டுவிட்டது. யு.டி.ஆரின் கீழ் தவறுதலாக அவர்கள் பெயரில் வழங்கப்பட்டுவிட்டது என்று எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு 2 மாதங்களுக்கு முன்பு தான் தெரிய வந்தது.

6. 1 மற்றும் 2ம் பிரதிவாதிகள் 12.01.1998–ல் தாசில்தாருக்கு என் பெயரில் பட்டா வழங்க கோரி கடிதம் எழுதினார்கள் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் அந்த கடிதத்தினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்தேன் நகல் என்ற காரணத்தினால் அது குறியீடு செய்யப்படவில்லை. மேற்சொன்ன 1 மற்றும் 2–ம் பிரதிவாதிகள் அவர்களின் கையொப்பம் போடவில்லை என்றும் நான் பொய்யாக தயாரித்த ஆவணம் என்பதால் தான் அதன் அசலினை நீதிமன்றத்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரியல்ல. உண்மையாகவே அது இயற்றப்பட்டு இருந்தால் அதன் அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் கையொப்பம் தான் அது. என் தாத்தா வாங்கிய சொத்திற்கும், 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளின் பூர்வீக சொத்திற்கும் எந்தவித சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு சொத்தினை கிரையம் செய்வதற்கும் எல்லா உரிமையும் உள்ளது என்றும் அவர்கள் தான் அனுபவத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அது எங்களின் சொத்து.

7. எனது தாத்தா பெயரில் உள்ள கிரைய ஆவணத்திலே சர்வே எண் 71/1 டி என்று தான் குறிப்பிட்டுள்ளது நான் வழக்கிற்காக தவறுதலாக 71/1 பி என்று கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து இன்றைய தேதியில் என் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. அதனால் இவ்வழக்கு தள்ளுபடி செய்யபட வேண்டும் என்றால் சரியல்ல. பொது அதிகாரப்பத்திரம் எழுதி கொடுத்தது தவறு என்று கூட நாங்கள் எதுவும் கோரவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 12.30.p.m.**